tamilguru.lk

# ஊவா மாகாணத்தில் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக கல்வியியல் பட்டதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல் – 2024

ஊவா மாகாணத்தில் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்காக ஊவா மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் இவ் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகளை உடைய கல்வியியல் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி **2024.03.15** ஆகும்.

**01. ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொதுவான தகைமைகள்:**

1.1 விண்ணப்பதாரர் பரம்பரையாகவோ அல்லது பதிவு செய்ததன் ஊடாகவோ இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

1.2 விண்ணப்பதாரர் ஊவா மாகாணத்தில் 03 வருடங்கள் நிரந்தர வதிவையுடைய பிரஜையாக இருத்தல் வேண்டும். (தொடர்ந்து 03 வருடங்களுக்கான வதிவை சான்றுப்படுத்தும் வாக்குரிமை பட்டியலின் பெயர்ப்பு நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று ஊவா மாகாணத்தில் நிரந்தரமாக வதிவையுடையவராக இருந்தாலும் ஊவா மாகாணத்திற்குள் தொடர்ச்சியான 03 வருடங்களுக்குள் நிரந்தர வதிவை உறுதி செய்ய இயலாத விண்ணப்பதாரிகள் ஊவா மாகாணத்திற்குள் தனது வாழ்க்கைத் துணையின் 03 வருட நிரந்தர வதிவை உறுதிப்படுத்த முடியும்.)

1.3 நன்னடத்தையுடன் மற்றும் நல்ல உடல் மற்றும் உள ஆரோக்கியத்துடன் கூடியவராக இருத்தல் வேண்டும்.

1.4 **2024.03.15** திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் மற்றும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**02. கல்வி தகைமைகள்:**

2.1. இலக்கம் 1885/38 மற்றும் 2014.10.23 ஆம் திகதி இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.2.1 பந்தியின் 6 ஆம் குறிப்பிற்கு ஏற்ப விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரர்களும் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்கள மொழியினை அல்லது தமிழ் மொழியினை ஒரு பாடமாக சித்தியடைந்திருத்தல்.

2.2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றினால், விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதியன்று செல்லுப்படியாகும் வகையில் கல்வியியல் பட்டம் ஒன்றினை பெற்றிருத்தல் வேணடும். அப்பட்டத்திற்காக பின்பற்றியுள்ள பிரதான பாடங்களுக்கு ஏற்ப இவ் அறிவித்தலின் 01ஆம் உப ஆவணத்தின் கீழ் தாங்கள் விண்ணப்பிக்கும் பாடம், பாட இலக்கம் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். இவ் அறிவித்தலின் கீழ் 01 ஆம் உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கான வெற்றிடங்களுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

**03. சேவை நிபந்தனைகள்:**

3.1. இப்பதவி நிரந்தரமானது. பதவிக்கு உரித்தான ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

3.2. முதலாவதாக நியமிக்கப்படும் பாடசாலையில் 05 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்ற வேண்டியதோடு, எந்தவொரு காரணத்திற்காகவும் இடமாற்றம் அல்லது சேவை இணைப்பினை பெறுவதற்காக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

3.3. 05 வருட சேவை காலத்தின் பின்னர் ஊவா மாகாண ஆசிரியர் இடமாற்ற கொள்கையின் பிரகாரம் சேவை தேவை அடிப்படையில் ஊவா மாகாணத்தின் வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுத்தருவதற்கு ஊவா மாகாண சபை கல்வி அமைச்சின் ஊடாக ஆராயப்படும்.

3.4. அரசாங்க நியமனத்தினை நிருவகிக்கும் பொதுவான நிபந்தனைகளுக்கும் 2014.10.23 ஆம் திகதி இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் 1885/38 னை உடைய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை பிரமாண குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அப்பிரமாண குறிப்பில் மேற்கொண்டுள்ள அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் கீழ்படிதல் வேண்டும்.

3.5. இப்பட்டதாரிகள் ஊவா மாகாண சபை அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவையின் 2-II தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதோடு, 2022.01.05 ஆம் திகதி பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016(iv) ன் GE-2-2016 – ஏ சம்பள பிரிவின் கீழ் ரூபா. 39,175/- 825 x 10 – 1,335 x 7 – 1,630 x20 – 89,370/- மாதாந்த சம்பள அளவீட்டின் 3வது சம்பள படியான ரூபா. 40,825/- சம்பளத்தில் நிலைப்படுத்தப்படுவர்.

## 04. ஆட்சேர்ப்பு செய்யும் முறை:

4.1. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட 40 வெற்றடங்களுக்கு மாத்திரமே இவ் அறிவித்தலின் கீழ் சேவை இணைப்பினை மேற்கொள்ள முடியும்.

விண்ணப்பதாரிகள் இவ் அறிவித்தலின் குறிப்பிட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார்களா என்பதை பரிசீலிப்பதற்கு பொதுவான நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு உட்படுத்தப்பட வேண்டும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகள் பொதுவான நேர்முகப் பரீட்சையில் விலக்களிக்கப்படுவர்.

4.2. விண்ணப்பித்துள்ள விண்ணப்பங்களில் ஏற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பதாரர்கள் பொதுவான நேர்முகப் பரீட்சையில் தோற்ற வேண்டியதுடன், பொதுவான நேர்முகப் பரீட்சையில் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் இவ் அறிவித்தலின் 4.4 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரயோக பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். விண்ணப்பதாரியினால் பிரயோக பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் வரிசைக்கிரமம் பிரகாரம் 40 வெற்றிடங்களுக்கு மாத்திரம் சேவை இணைப்பு மேற்கொள்ளப்படும்.

4.3. **பொது நேர்முக பரீட்சை:**
இலங்கை ஆசிரியர் சேவை பிரமாண குறிப்பு மற்றும் அதற்கு இணங்கியதாக வெளியிடப்பட்ட ஆட்சேர்ப்பு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூரணப்படுத்தியுள்ளாரா என பரிசீலித்தல் மற்றும் உடல், உள தகுதி பற்றி பரிசீலிக்கப்படும். நேர்முக பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

4.4. **பிரயோக பரீட்சை: காலம்** - 5 நிமிடங்களுக்குக் குறையாமல் காலம் பெற்றுத்தரப்படும்.
- உயர்ந்தபட்ச புள்ளிகள் 25

ஆசிரியர் தொழிலில் முக்கியமானதான கற்றல் மற்றும் கற்பித்தல் நடவடிக்கை தொடர்பாக விண்ணப்பதாரரின் திறமை அளவிடப்படும். இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களை அடிப்படையாக கொண்டு இதற்காக புள்ளிகள் பெற்றுத்தரப்படும். விண்ணப்பதாரியினால் நியமனம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்ற பாடம் தொடர்பில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தலைப்பின் கீழ் செயற்பாடொன்றினை முனவைக்க வேணடும். இதற்கு கீழ் குறிப்பிட்ட அளவுகோல்களின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும். இப்பரீட்சை ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பரிசீலனைக் குழுவின் மூலம் நடாத்தப்படும்.

| தொடர் இலக்கம் | பிரயோக பரீட்சையில் புள்ளிகள் பெற்றுத்தரப்படும் அளவுக்கோல்கள் | அளவுக்கோல்களின் நோக்கம் | உயர்ந்த பட்ச புள்ளிகள் | தேர்ச்சி பெறுவதற்கு தேவையான குறைந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | நோக்கம் மற்றும் அணுகல் தன்மை | வெற்றிகரமாக பாடத்தின் நோக்கத்தினை விளங்கப்படுத்துதல் மற்றும் பாடத்திற்கு அணுகும் திறமையினை மதிப்பிடுதல் | 05 | 02 |
| 02 | ஆளுமை மற்றும் குரல் நிருவாகம் | ஆசிரியராக நல்ல ஆளுமையுடன் இருத்தல் மற்றும் கற்பிக்கும் போது சரியான முறையில் குரலை | 05 | 02 |

tamilguru.lk

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிருவகித்தல் தொடர்பான திறனை மதிப்பிடுதல் | | |
| 03 | தொடர்பாடல் தெளிவு | கற்றல் / கற்பித்தல் செயற்பாடுகளில் தேவையான விடயங்களை உற்பத்தித்திறன் மிக்கதாக தொடர்பாடல் செய்வதற்கான திறனை மதிப்பிடுதல். | 05 | 02 |
| 04 | நேர முகாமைத்துவம் | பெற்றுத்தரப்படும் கால எல்லைக்குள் நோக்கத்தை அடைவதற்கான திறமையினை மதிப்பிடுதல். | 05 | 02 |
| 05 | சமர்ப்பித்தல் முறையில் நுட்பங்களின் பாவனை | நோக்கத்தினை அடைவதற்காக சமர்ப்பிப்பதற்கான நுட்ப முறையினை சரியாக பயன்படுத்தும் திறனை மதிப்பிடுதல். | 05 | 02 |
| **மொத்த புள்ளிகளின் எண்ணிக்கை** | | | **25** | **10** |

- பிரயோக பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு அளவுகோலுக்கும் குறைந்த பட்சம் 02 புள்ளிகள் வீதம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

4.5. அதேபோல இவ்வாட்சேர்ப்பு அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் காணப்படுமாயின் அவ்விடயங்கள் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சேவையின் பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ள விதைப்புரைகளுக்கு அமைவானதாக காணப்படும்.

## 05. விண்ணப்பிக்க வேண்டிய முறை:

5.1. இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப A4 அளவிலான கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தினை தயாரித்தல் வேண்டும். விண்ணப்பப்படித்தில் ஒவ்வொறு தலைப்புகளுக்கும் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றி தெளிவாக தத்தமது கையெழுத்தினாலேயே நிரப்புதல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 06 வரையிலான பிரிவுகள் முதல் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலும் காணப்படும் விதத்தில் விண்ணப்பப்படிவத்தினை தயார்செய்ய வேண்டும். பரீட்சை அனுமதி அட்டை மின்னஞ்சல் ஊடாக அனுப்பப்படுவதால் மின்னஞ்சல் விலாசத்தினை சரியாக குறிப்பிடுதல் கட்டாயமானதாகும்.

5.2. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் **2024.03.15** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு **“ செயலாளர், ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு, இலக்கம் 14/4, பீலிபொதகமை வீதி, பிங்கராவை, பதுளை”** என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றது தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தினை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் **“ ஊவா மாகாண அரசாங்க சேவையின் ஆசிரியர் சேவையின் 2 - II தரத்திற்கு கல்வியியல் பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்தல் - 2024”** எனவும் மற்றும் தாங்கள் விண்ணப்பிக்கும் விடயம் மற்றும் விடய இலக்கத்தினை தெளிவாக குறிப்பிடுதலும் வேண்டும்.

5.3. விண்ணபதாரர் ஒருவருக்கு ஒரு பாடத்திற்கு மாத்திரம் விண்ணப்பிக்க இயலுவதோடு விண்ணப்பிக்கும் பாடத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. இது தொடர்பில் முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. வெற்றிட விடயப் பட்டியலிற்கு ஏற்ப விண்ணப்பிக்கும் பாடம், பாட இலக்கம், மற்றும் கற்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் மொழிமூலம் விண்ணப்பப்படிவத்தின் குறித்த இடத்தில் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

5.4. ஒரு விண்ணப்பதாரியினால் ஒரு விண்ணப்பப்படிவம் மாத்திரமே முன்வைக்க முடியும். நியமன அதிகாரியினால் விடய வெற்றிடங்களுக்கு ஏற்ப தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படும் பாடசாலை தொடர்பில் தீர்மானிக்கப்படுவதோடு, ஊவா மாகாணத்தில் வெற்றிடம் உள்ள எந்தவொரு பாடசாலையிலும் கடமை புரிவதற்கு விண்ணப்பதாரர் ஒப்புக்கொள்ள வேண்டும்.

5.5. விண்ணப்பப்படிவத்துடன் எந்தவொரு சான்றிதழ்களும் இணைக்கப்படக்கூடாது. குறித்த மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப அமையாத, தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள், பூரணமாக தகவல்களை வழங்கியிராத விண்ணப்பப்படிவங்கள், மற்றும் தேவையான தகைமைகளை கொண்டிராத விண்ணப்பப்படிவங்கள் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் தபாலில் காணாமல் போதல் மற்றும் தாமதமாகுதல் தொடர்பில் முன்வைக்கப்படும் எந்தவொரு முறையீடுகளும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. முன்வைக்கும் விண்ணப்பப்படிவத்தில் நிழல்பட பிரதி ஒன்றினை தம்மிடம் வைத்திருப்பது நன்மை பயப்பதாகும்.

06. <u>கையொப்பத்தினை சான்றுப்படுத்துதல்:</u>

விண்ணப்பபடிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை அரசாங்க பாடசாலையின் அதிபரினால் / பிரிவின் கிராம உத்தியோகத்தரினால் / சமாதான நீதவான் ஒருவரினால் / சத்திய பிரமாண ஆணையாளரினால் / பிரசித்தி பெற்ற நொதாரிசு ஒருவரினால் / முப்படையின் அதிகாரம் உடைய உத்தியோகத்தரினால் / பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியில் உள்ள உத்தியோகத்தரினால் / அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியில் உள்ள ரூபா. 47,615/- அல்லது அதற்கு அதிகமாக மாதாந்த இணைந்த படியினை பெறும் நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

07. நேர்முகப் பரீட்சைக்கு உரிய தினத்தில் சமூகமளிக்காத விண்ணப்பதாரர்கள் தொடர்பில் எவ்விதத்திலும் மீண்டும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

08. அத்துடன் நேர்முகப் பரீட்சை தினத்தன்று அனைத்து சான்றிதல்களும் முன்வைக்கப்பட வேண்டியதுடன், பின்னர் முன்வைக்கப்படும் எந்ததொரு சான்றிதலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

09. **பொய்யான தகவல்களை வழங்குதல்:**

ஆசிரியர் சேவைக்கு இணைக்கப்பட்டதன் பின்னர் விண்ணப்பதாரியினால் முன்வைக்கப்பட்ட ஏதேனுமொரு தகவல் பொய்யானது என தெரியவந்தால் அல்லது வேண்டுமென்றே பொய்யான தகவல்களை வழங்கியுள்ளார் அல்லது சரியான தகவல்களை வேண்டுமென்றே மறைத்துள்ளார் என தெரியவந்தால் அவரின் சேவையானது முடிவுறுத்தப்படும்.

10. இப்பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல்/ ஆட்சேர்ப்பு செய்யாமலிருத்தல் அல்லது வெற்றிட எண்ணிக்கையினது ஒரு பகுதியினை நிரப்புதல் அல்லது வெற்றிட எண்ணிக்கை தொடர்பில் அல்லது இது தொடர்பான ஏதேனும் விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானமானது ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினாலேயே மேற்கொள்ளப்படும். அதேபோல இவ்வறிவித்தலின் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாத ஏதேனும் விடயங்கள் காணப்படின் அது தொடர்பில் விவரித்தல்/ தீர்மானம் எடுத்தல் ஊவா மாகாண ஆளுநரின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலின் மொழிகளுக்கு இடையில் பொருத்தமின்மை காணப்படுமாயின் அல்லது முரண்பாடு இருப்பதாக தெரியவந்தால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழிமூல அறிவித்தலிற்கு ஏற்ப செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

## உப ஆவணம் இலக்கம் 01 - விடய வெற்றிட விபரம்

| விடய இல. | விடயம் | விடய இல. | விடயம் |
|---|---|---|---|
| 1 | முதல்நிலைக் கல்வி | 32 | விவசாய தொழில்நுட்பம் |
| 2 | பௌத்தம் | 33 | மருந்து வளங்கள் தொடர்பான தொழிநுட்பம் |
| 3 | பௌத்த நாகரீகம் | 34 | நடைமுறை மற்றும் தொழில்நுட்ப திறன்கள் |
| 4 | இஸ்லாம் | 35 | இரசாயனவியல் |
| 5 | இஸ்லாம் நாகரீகம் | 36 | பௌதீகவியல் |
| 6 | உரோமன் கத்தோலிக்கம் | 37 | உயிரியல் |
| 7 | கிறிஸ்தவம் | 38 | விவசாயக் கல்வி |
| 8 | கிறிஸ்தவ நாகரீகம் | 39 | இணை கணிதம் |
| 9 | இந்து மதம் | 40 | உயர் கணிதம் |

| | | | |
|---|---|---|---|
| 10 | இந்து நாகரீகம் | 41 | பொறியியல் தொழில்நுட்பம் |
| 11 | சிங்கள மொழி | 42 | மருந்து அமைப்புகள் தொழில்நுட்பம் |
| 12 | சிங்களம் இரண்டாம் மொழி | 43 | தொழில்நுட்பத்திற்கான அறிவியல் |
| 13 | ஆங்கில மொழி | 44 | மின்சாரம் மற்றும் இலத்திரனியல் தொழிநுட்ப ஆய்வுகள் |
| 14 | தமிழ் மொழி | 45 | கட்டுமான தொழில்நுட்ப ஆய்வுகள் |
| 15 | தமிழ் இரண்டாம் மொழி | 46 | உட்புற வடிவமைப்பு |
| 16 | குடிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம் | 47 | இயற்கை வடிவமைப்பு |
| 17 | புவியியல் | 48 | மோட்டார் இயந்திரவியல் தொழில்நுட்ப ஆய்வு |
| 18 | கணிதம் | 49 | உலோக செயலாக்க தொழில்நுட்பம் பற்றிய ஆய்வு |
| 19 | விஞ்ஞானம் | 50 | அலுமினியம் செயலாக்க தொழில்நுட்பம் பற்றிய ஆய்வு |
| 20 | வரலாறு (இந்திய/ ஐரோப்பிய/ சமகால) | 51 | உற்பத்தியியல் |
| 21 | வரலாறு (க.பொ.த.(சா/த)) | 52 | பயன்பாட்டு தோட்டக்கலை தொழில்நுட்பம் பற்றிய ஆய்வு |
| 22 | வணிகம் மற்றும் கணக்கியல் கல்வி | 53 | தோட்ட பயிர் உற்பத்தி தொழில்நுட்பம் பற்றிய ஆய்வு |
| 23 | தொழில்முனைவு ஆய்வுகள் | 54 | கால்நடைவள உற்பத்தி தொழில்நுட்பம் |
| 24 | தகவல் தொடர்பு தொழில்நுட்பம் | 55 | நீர் வளங்கள் தொழில்நுட்ப ஆய்வு |
| 25 | அரசியல் | 56 | கலைகள்/நாடகம் மற்றும் நாடகம் |
| 26 | பொருளியல் | 57 | செயல்திறன் மேலாண்மை |
| 27 | கணக்கியல் | 58 | பயணம் மற்றும் விருந்தோம்பல் |
| 28 | வணிக ஆய்வுகள் | 59 | உணவு உற்பத்தி தொழில்நுட்பம் பற்றிய ஆய்வு |
| 29 | தர்க்கம் மற்றும் அறிவியல் முறை | 60 | உடல்நலம், உடற்கல்வி மற்றும் விளையாட்டு |
| 30 | மனை பொருளியல் | 61 | சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு |
| 31 | தொடர்பு மற்றும் ஊடக ஆய்வுகள் | 62 | குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு |

ஆணைக்குழுவின் உத்தரவின் பிரகாரம்,

(எச்.எம். ஜீவந்த ஹேரத்)
செயலாளர்
ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு

2024.03.04 ம் திகதி
ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு,
இல. 14/4, பீலிபொதகமை வீதி,
பிங்கராவை, பதுளை.